கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்
முன்னிலை : திரு.E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(முகூபொ),
திருமங்கலம்.

2026–ம் ஆண்டு ஏப்ரல் 10ம் நாள், வெள்ளிக்கிழமை
அசல் வழக்கு எண்.674/2010
CNR No.TNMD130001642010
* * * **

1) கருத்தமாயன் (இறப்பு)
2) அதிவீரராமபாண்டியன் (இறப்பு)
3) சீதையம்மாள்
4) சிவக்குமார்
5) செந்தில்குமார்
6) சுரேஷ்குமார்
7) நாகஜோதி
8) மேரிராணி
9) சிவக்குமார்
10) சிவகாமி ... வாதிகள்

/ எதிரிடை /

1) பிச்சைமணி
2) மாயக்காள் ... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது கடந்த 30.03.2026ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.பொன்னம்பலம் அவர்கள் ஆஜராகியும், 1ம் பிரதிவாதி தரப்பில்

கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.நமசிவாயம் அவர்கள் ஆஜராகியும், 2ம் பிரதிவாதி ஒருதலைபட்சமாக்கப்பட்டும், வாதிகள் தரப்பு வாதுரைகளை கேட்டறிந்தும், வழக்குரை, எதிர்வழக்குரை. எழுத்துப்பூர்வமான வாதுரை மற்றும் சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

தாவா சொத்து வாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்டது என விளம்புகை செய்யக் கோரியும், அதை தொடர்ந்து தாவா சொத்தில் வாதிகளின் அமைதியான அனுபவத்தை இந்த நிர் பிரதிவாதிகளோ அவர்களது வகையாட்களோ எவ்விதத்திலும் இடையூறு செய்யக் கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக்கோரியும், 1ம் பிரதிவாதிக்காக 2ம் பிரதிவாதியால் ஏற்படுத்தப்பட்ட 20.02.1996ம் தேதியிட்ட விற்பனை பத்திரம் செல்லத்தக்கதல்ல என உத்தரவிடக்கோரியும், இவ்வழக்கின் செலவுத்தொகை கோரியும், வாதிகளால் இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 1. வழக்குரையின் சுருக்கம்:-

1.1) தாவாச் சொத்து ஆதியில் 1, 2 வாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்டது என்றும், மேற்படி சொத்தினை இருவரும் கூட்டாக

தங்கள் கைவசம் வைத்து அனுபவம் செய்து வந்தனர் என்றும், மேற்படி சொத்தானது மானாவாரி நிலம் என்பதால் அரசாங்கம் தாவா சொத்திற்கு வரி வசூல் செய்யவில்லை என்றும், மேலும் இந்த 1, 2 வாதிகள் பெயரில் பட்டா எண்.534 என ஏற்பட்டு அவர்கள் அனுபவம் செய்து வந்தனர் என்றும், அதன் பிறகு நடைபெற்ற நிலவுடைமை மேம்பாட்டு திட்ட காலத்தில் தாவா சொத்திற்கு பட்டா எண்.619 என ஏற்பட்டது என்றும், அதே போல் தாவா சொத்தின் சர்வே எண்.13/2N1 என்பது எந்தவிதமான உட்பிரிவுகளும் ஏற்படவில்லை என்றும், அதனால் தாவா சொத்து இந்த நிர் 1, 2 வாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்டு தங்கள் கைவசம் வைத்து கூட்டாக அனுபவம் செய்து வந்தனர் என்றும்,

1.2) இந்நிலையில், தாவா சொத்தினை 3ம் நபர்களுக்கு விற்பனை செய்வதற்கான தேவை ஏற்பட்டு அந்த சமயத்தில் தாவா சொத்தினை விற்க நடவடிக்கை எடுக்கும் போது இந்த நிர் 1ம் பிரதிவாதி மேற்படி சொத்திற்கு உரிமைப்பட்டவர் என்றும், அதனால் மேற்படி சொத்து தனக்கு பாத்தியப்பட்டதாக பிரஸ்தாபம் செய்து வந்துள்ளார் என்றும், அதன் பிறகு விசாரித்து பார்த்த போது 2ம் பிரதிவாதியிடம் இருந்து 1ம் பிரதிவாதி மேற்படி சொத்தினை கிரையம் பெற்றுள்ளதாக கூறப்பட்டது என்றும், 1ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு கடந்த 20.02.1996ம் தேதிய பதிவு கிரைய ஆவணத்தை நகல் எடுத்து பார்த்த போது மேற்படி

ஆவணத்தை சிவனாண்டி தேவர் அவர்களின் மகன் ஆண்டிச்சாமி மற்றும் மாயக்காள் இருவரும் சேர்ந்து மேற்படி ஆவணத்தை மோசடியாக உற்பத்தி செய்துள்ள விவரம் தெரிய வந்தது என்றும், எனவே, தாவா சொத்து மேற்படியார்களுக்கு தனித்து பாத்தியப்பட்டது என விளம்புகை செய்தும், அதனை தொடர்ந்து வாதிகளின் அனுபவத்தை இடையூறு செய்யக் கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த 20.02.1996ம் தேதிய கிரைய ஆவணம் சட்டப்படி செல்லாது என விளம்புகை செய்யக் கோரியும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>2) எதிர்வழக்குரையின் சுருக்கம்:–</u>**

2.1) தாவா சொத்தும் அதற்கு அதிகம் உள்ள சொத்தான 1 ஏக்கர் 94 செண்டு ஆதியில் அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்ட ஒன்று என்றும், அதனை 11.02.1932ம் தேதியில் D.K.T. No.23/41 ன்படி சின்ன சிவனாண்டி என்பவருக்கு அரசாங்கத்தால் ஒப்படைப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி ஒப்படைப்பு பெற்ற பின் சின்ன சிவனாண்டி தனது ஆயுள் காலம் வரை அதனை தனிப்பட்ட முறையில் அனுபவம் செய்து வந்தார் என்றும், சின்ன சிவனாண்டித்தேவரின் இறப்பிற்கு பின்னிட்டு அவரது இரண்டு மகன்கள் அனுபவம் செய்து

வந்தார்கள் என்றும், அதன் பட்டா எண்.319 என்றும், மேலும் குடும்ப சூழலின் காரணமாக ஆண்டிச்சாமித்தேவரும் அவரது சகோதரரும் கூட்டுச்சேர்ந்து பொன்னுச்சாமி தேவர் என்பவருக்கு ஆவண எண்.678/1959 தேதி 17.03.1959ல் சுவாதீனத்துடன் கூடிய அடமான பத்திரம் பதிந்து கொடுத்துள்ளார்கள் என்றும், அதன்படி பொன்னுச்சாமி தேவர் விவசாயம் செய்து இந்த 2ம் பிரதிவாதி பெயரில் கிரையப்பத்திரம் பதியும் வரை அனுபவம் செய்து வந்தார் என்றும், இந்த 2ம் பிரதிவாதி தாவா சொத்தும் அதற்கு அதிகம் உள்ள சொத்தான 1 ஏக்கர் 94 செண்டினை ஆண்டிச்சாமித்தேவர் மற்றும் அவரது வாரிசுகள், சிவமாயத்தேவர் மற்றும் அவரது வாரிசுகளிடமிருந்து 20.04.1981ம் தேதி ஆவண எண்.441/81ன்படி கிரையப்பத்திரம் எழுதி பதிந்து கொடுத்துள்ளார்கள் என்றும், மேற்படி கிரையப்பத்திரம் பதிந்த தேதியிலிருந்து இந்த 2ம் பிரதிவாதி தாவா சொத்தை அடைந்து அனுபவம் செய்து வந்தார் என்றும், அதன் பின்னிட்டு இந்த 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு ஆவண எண்.126/96ன் அடிப்படையில் கிரையப்பத்திரம் பதிந்து கொடுத்துள்ளார் என்றும்,

2.2) 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற தேதியிலிருந்து தாவா சொத்தையும் அதற்கு அதிகம் உள்ள சொத்தையும் அனுபவம் செய்து வருவதாகவும், கிரைய ஆவணமானது 2ம் பிரதிவாதி பெயரில் இருந்தாலும் பட்டாவானது ஆண்டிச்சாமி தேவர் வகையறா பெயரில்

இருந்து வந்தது என்றும், ஆனால் இந்த 1 ஏக்கர் 94 செண்டிற்கு இந்த வாதிகளுக்கு எக்காலத்திலும் உரிமை கிடையாது என்றும், இந்த வாதிகள் பிராதில் சொல்லியுள்ள அனைத்து சங்கதிகளும் தவறானவை மற்றும் உண்மைக்கு புறம்பானவை என்றும், எனவே வாதியின் வழக்கை பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கூறி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்.

**3. எழுவினாக்கள்**:–

இந்த வழக்கில் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்த எதிர்வழக்குரை மற்றும் இந்த வழக்கு சம்மந்தமான அனைத்து ஆவணங்களையும் இந்நீதிமன்றம் கவனமாக நன்கு பரிசீலனை செய்து கீழ்கண்ட எழுவினாக்கள் இந்த நீதிமன்றத்தினால் வனையப்பட்டுள்ளன.

1. தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டு அவரது அனுபவத்தில் உள்ளதா?

2. வாதிகள் கோரியப்படி பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதா?
3. வாதிகள் கோரியபடி பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்ககூடியதா?

4. 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு 20.02.1996ம் தேதி எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் செல்லாது என விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்ககூடியதா?
5. தரப்பினர்களுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் என்ன?

**<u>4) சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> : –**

4.1) வாதிகள் தரப்பில், வா.சா.1, வா.சா.2 விசாரிக்கப்பட்டு, வா.சா.1 மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

4.2) பிரதிவாதி தரப்பில், பி.வா.சா.1 விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக பி.வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**<u>எழுவினாக்களுக்கான தீர்வு:–</u>**

**<u>5) எழுவினா எண்–1ற்கான தீர்வு</u>:–**

1. தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டு அவரது அனுபவத்தில் உள்ளதா?

5.1) தாவா சொத்து ஆதியில் 1, 2 வாதிகளுக்கு பூர்வீக பாத்தியப்பட்டது என்றும், எனவே வழக்கு சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்ய வேண்டி அசல் வழக்கு கடந்த 21.12.2010ல் தாக்கல் செய்யப்பட்டு 04.02.2011ல் கோப்பிற்கு

எடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், அசல் வழக்கில் 7ம் வாதி இ.ம.எண்.124/2020 தாக்கல் செய்து வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார்.

5.2) மேற்படி, 7ம் வாதி வழக்கு சொத்தை 1, 2 வாதிகளிடமிருந்து வா.சா.ஆ.6 மற்றும் வா.சா.ஆ.7 கிரைய ஆவணங்கள் மூலம் கிரையம் பெற்றதாக வா.சா.1 சாட்சியமளித்துள்ளார். மேற்படி, வா.சா.ஆ.6, வா.சா.ஆ.7 ஆவணங்களானது வழக்கு தாக்கல் காலத்திற்கு முன்பு ஏற்பட்ட ஆவணங்கள் ஆகும். இந்நிலையில், தாவா சொத்தை 1, 2 வாதிகள் வா.சா.ஆ.6, வா.சா.ஆ.7 ஆவணங்கள் மூலம் 7ம் வாதிக்கு கிரையம் கொடுததற்கு பின்பு தாவா சொத்து 1, 2 வாதிகளுக்கு பாத்தியப்பட்டதாக விளம்புகை பரிகாரம் கோரி 1, 2 வாதிகளால் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5.3) மேலும், வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்ட 3ம் வாதியான 1ம் வாதியின் மனைவி தனது சாட்சியத்தில், வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே வழக்கு சொத்தை 7ம் வாதிக்கு 1, 2 வாதிகள் கிரையம் கொடுத்துவிட்டதாக சாட்சியமளித்துள்ளார். இந்நிலையில், வாதி தரப்பில் தாக்கல் செய்த வழக்குரையின் வழக்கு மூலமானது வா.சா.1 சாட்சியத்தின்படி தவறானதாக உள்ளது.

5.4) வழக்கு சொத்து 7ம் வாதிக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்று வாதி தரப்பில் விசாரணை செய்யப்பட்ட வா.சா.1, 2 சாட்சியமளித்த போதும், வழக்கு பரிகாரமானது வழக்கு சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றே விளம்புகை பரிகாரம் வேண்டி காணப்பட்டுள்ளது. அதன்படி வழக்கு பிராது பரிகாரம் முறையான முறையில் சீர்திருத்தம் செய்யப்படாமல் வழக்கு பிராது சரியான முறையில் வடிவமைக்கப்படவில்லை என்று தெரியவருகிறது.

5.5) வழக்கு சொத்து 1, 2 வாதிகளுக்கு பூர்வீக பாத்தியப்பட்டது என்று வாதிகள் தரப்பில் எடுத்துரைத்து 1, 2 வாதிகள் பெயரில் வழக்கு சொத்தை பொறுத்து ஏற்படுத்தப்பட்டுள்ள பட்டா பாஸ்புத்தகம் வா.சா.ஆ.1 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி 1, 2 வாதிகளுக்கு வழக்கு சொத்து பூர்வீக பாத்தியப்பட்டது என்பதை நிரூபணம் செய்யும்விதமாக வா.சா.ஆ.1 ஆவணத்தை தவிர வேறு சட்டப்படியான ஆவணங்கள் எதுவும் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை.

5.6) இந்நிலையில், வழக்கு சொத்து ஆதியில் சின்னசிவனாண்டி தேவருக்கு பாத்தியப்பட்டு அவரது இறப்பிற்கு பின்னர் அவரது வாரிசுகளான ஆண்டிச்சாமி தேவர் மற்றும் சிவமாயத்தேவர் ஆகியோருக்கு பாத்தியப்பட்டு இருந்தது என்றும், பின்னிட்டு மேற்படி இருவரும் பொன்னுச்சாமி தேவர் என்பவருக்கு 1959ல் பி.வா.சா.ஆ.2

ஆவணம் மூலம் ஒத்தி கொடுத்துள்ளார் என்றும், பின்னிட்டு மேற்படி ஒத்தி ஆவணமானது 1969ல் பி.வா.சா.ஆ.3 ஆவணம் மூலம் மேல்ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்றும் பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

5.7) பின்னிட்டு, மேற்படி ஆண்டிச்சாமி தேவர், சிவமாயத்தேவர் மற்றும் அவர்களது வாரிசுகள் சேர்ந்து 2ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.4 ஆவணம் மூலம் கிரையம் கொடுத்துள்ளார் என்றும், மேற்படி 2ம் பிரதிவாதி வா.சா.ஆ.5 ஆவணம் மூலம் 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றும் பி.வா.சா.1 சாட்சியமளித்துள்ளார். வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 பட்டா பாஸ்புத்தகமானது 16.10.1979ல் ஏற்படுத்தப்பட்டதாக காணப்பட்டுள்ளது. இந்நிலையில், வழக்கு சொத்தை பொறுத்து 2ம் பிரதிவாதியின் மூலகிரையதாரர்கள் பி.வா.சா.ஆ.2, பி.வா.சா.ஆ.3 பதிவு ஒத்தி ஆவணங்களை ஏற்படுத்திய நிலையிலும், அதற்கு பின்னிட்டு 2ம் பிரதிவாதி பி.வா.சா.ஆ.4 ஆவணம் மூலம் 1981ல் வழக்கு சொத்தை கிரையம் பெற்ற நிலையிலும், மேற்படி ஆவணங்களை பொறுத்து சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று வாதிகள் தரப்பில் எவ்வித பரிகாரமும் கோரவில்லை.

5.8) மாறாக, வழக்கு சொத்தை பொறுத்து பி.வா.சா.ஆ.2, பி.வா.சா.ஆ.3, பி.வா.சா.ஆ.4 சட்ட காலத்திற்கு மேலாகவும், பதிவு

செய்யப்பட்ட ஆவணமாக உள்ள நிலையில் வருவாய்துறை ஆவணங்களை விட, கிரைய ஆவணங்களை மேலானது என்ற சட்ட கோட்பாட்டின்படியும், வா.சா.ஆ.1 வருவாய்த்துறை ஆவணத்தை மட்டும் வைத்து வழக்கு சொத்து 1, 2 வாதிகளுக்கு பாத்தியப்பட்டு இருந்தது என்ற வாதிகள் தரப்பு வாதமானது சட்டப்படி ஏற்கத்தக்கதாக இல்லை.

5.9) அசல் வழக்கிற்கு உரிய வழக்கு மூலம் இல்லாததாலும், அசல் வழக்கு உரிய முறையில் வடிவமைக்கப்படாததாலும், வழக்கு சொத்தை பொறுத்து 1, 2 வாதிகளின் உரிமைமூலமானது சட்டப்படியாக நிரூபணம் செய்யப்படவில்லை என்பதாலும், பி.வா.சா.ஆ.4 ஆவணத்தை பொறுத்து சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்ற விளம்புகை பரிகாரம் வாதிகள் தரப்பில் கோராத நிலையிலும், தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்ற விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே, தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டு வாதிகள் அனுபவம் செய்து வருவதாக வாதிகள் தரப்பில் நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து எழுவினா–1ற்கு வாதிகளுக்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

**6) எழுவினாக்கள் எண்—2, 3 ற்கான தீர்வு:—**

2. வாதிகள் கோரியப்படி பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதா?
3. வாதிகள் கோரியபடி பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்ககூடியதா?

6.1) அசல் வழக்கிற்கு உரிய வழக்கு மூலம் இல்லாததாலும், அசல் வழக்கு உரிய முறையில் வடிவமைக்கப்படாததாலும், வழக்கு சொத்தை பொறுத்து 1, 2 வாதிகளின் உரிமைமூலமானது சட்டப்படியாக நிரூபணம் செய்யப்படவில்லை என்பதாலும், பி.வா.சா.ஆ.4 ஆவணத்தை பொறுத்து சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்ற விளம்புகை பரிகாரம் வாதிகள் தரப்பில் கோராத நிலையிலும், தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்ற விளம்புகை பரிகாரம் மற்றும் தாவா சொத்தில் வாதிகளின் அமைதியான அனுபவத்தை இந்த நிர் பிரதிவாதிகளோ அவர்களது வகையாட்களோ எவ்விதத்திலும் இடையூறு செய்யக் கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமானது வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து எழுவினாக்கள்—2, 3 ற்கு வாதிகளுக்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

**7) எழுவினா எண்–4 ற்கான தீர்வு:–**

4. 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு 20.02.1996ம் தேதி எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் செல்லாது என விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்ககூடியதா?

தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்ற விளம்புகை பரிகாரம் மற்றும் தாவா சொத்தில் வாதிகளின் அமைதியான அனுபவத்தை இந்த நிர் பிரதிவாதிகளோ அவர்களது வகையாட்களோ எவ்விதத்திலும் இடையூறு செய்யக் கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமானது வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல இந்நீதிமன்றம் தீர்மானித்துள்ள நிலையில், வாதிகள் கோரும் 2ம் பிரதிவாதி, 1ம் பிரதிவாதிக்கு 20.02.1996ம் தேதி எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் செல்லாது என்ற விளம்புகை பரிகாரமும் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து எழுவினா–4ற்கு வாதிகளுக்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

**8) எழுவினா எண்–5 ற்கான தீர்வு:–**

5. தரப்பினர்களுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் என்ன?

வாதிகளுக்கு கிடைக்ககூடிய வேறு பரிகாரங்கள் என்ன என்று பரிசீலனை செய்கையில், தாவாச்சொத்தினை பொறுத்து வாதிகள்

கோரியுள்ள விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் வாதிகளுக்கு எதிராக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், வழக்கு சந்தர்ப்ப சூழ்நிலைகளின்படி வாதிகளுக்கு வேறு பரிகாரங்கள் எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்று எழுவினா எண்–5ற்கு விடை காணப்படுகிறது.

**முடிவாக,** இவ்வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 10.04.2026ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.04.10 18:29:04 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(முகூபொ),
திருமங்கலம்.

**<u>இணைப்பு:–</u>**

**1. <u>வாதி தரப்பு சாட்சிகள்</u> :–**

வா.சா.1 – நாகஜோதி
வா.சா.2 – சீதையம்மாள்

**<u>2. வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>: –**

| | |
|---|---|
| வா.சா.ஆ.1. | பட்டா பாஸ் புத்தகம். |
| வா.சா.ஆ.2. | பட்டா. |
| வா.சா.ஆ.3. | வில்லங்க சான்றிதழ். |
| வா.சா.ஆ.4. | 20.04.1981ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.5. | 20.02.1996ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.6. | 12.04.2010ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின் நிதிமன்ற சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.7. | 22.05.2012ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின் நீதிமன்ற சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.8. | 22.04.2011ம் தேதியிட்ட கிஸ்தி ரசீதின் நீதிமன்ற சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.9. | அசல் வழக்கு எண்.557/2012 பிராது நகல். |
| வா.சா.ஆ.10. | அசல் வழக்கு எண்.557/2012 எதிர் வழக்குரை நகல். |
| வா.சா.ஆ.11. | 29.09.2022ம் தேதியிட்ட கணினி பட்டா. |

**3. பிரதிவாதி தரப்பு சாட்சிகள்:**

பி.வா.சா.1 – பிச்சைமணி (1ம் பிரதிவாதி)

**4. பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்:**

| | |
|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 04.06.2015ம் தேதியிட்ட பட்டாவின் நீதிமன்ற சான்றிட்ட நகல். |
| பி.வா.சா.ஆ.2 | 17.03.1959ம் தேதியிட்ட ஒத்தி பத்திரத்தின் நிதிமன்ற சான்றிட்ட நகல். |
| பி.வா.சா.ஆ.3 | 24.03.1969ம் தேதியிட்ட மேல் ஒத்தி பத்திரத்தின் நிதிமன்ற சான்றிட்ட நகல். |
| பி.வா.சா.ஆ.4 | 20.04.1981ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின் நீதிமன்ற சான்றிட்ட நகல். |
| பி.வா.சா.ஆ.5 | 20.02.1996ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின் நீதிமன்ற சான்றிட்ட நகல். |
| பி.வா.சா.ஆ.6 | 20.04.2010ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு. |
| பி.வா.சா.ஆ.7 | 30.04.2010ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் நீதிமன்ற சான்றிட்ட நகல். |
| பி.வா.சா.ஆ.8 | திருப்பப்பட்ட அஞ்சலக கவர்களின் நீதிமன்ற சான்றிட்ட நகல். |
| பி.வா.சா.ஆ.9 | 10.03.2016ம் தேதியிட்ட விசாரணை அறிவிப்பின் நீதிமன்ற சான்றிட்ட நகல். |
| பி.வா.சா.ஆ.10 | அசல் வழக்கு எண்.557/2012ற்கான வழக்கின் தீர்ப்புரை. |
| பி.வா.சா.ஆ.11 | அசல் வழக்கு எண்.557/2012ற்கான வழக்கின் தீர்ப்பாணை. |
| பி.வா.சா.ஆ.12 | 1385 பசலிக்கான அடங்கல் கணக்கின் நீதிமன்ற சான்றிட்ட நகல். |

5. **<u>நீதிமன்ற சாட்சிகள்</u>:** இல்லை.

6. **<u>நீதிமன்ற சான்றாவணங்கள்</u> :** இல்லை.

7. **<u>சாட்சிய சான்றாவணங்கள்</u> :** இல்லை.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.04.10 18:29:16 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(முகூபொ),
திருமங்கலம்.

அசல் வழக்கு எண்.674/2010
செவ்வை – தீர்ப்புரை
நாள்: 10.04.2026